பே.சா.து.ந.க.எண்.பி2/1019/2020

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

## அறிவிப்பு

சிறப்பு அதிகாரி (மன்றம்) தீர்மானத்தின்படி, சாலை பணிகள் மற்றும் கட்டடப் பணிகளை ஒருங்கிணைத்து ஒரே பதிவாக பதிவு செய்ய நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் வருடத்திற்கு (Financial Year) ஒரு முறை புதுப்பித்தல் நடைமுறையில் உள்ளது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் இவ்வருடத்திற்கான (2020-2021ஆம் நிதியாண்டு) ஏப்ரல் மாதம்-1ம் தேதி முதல் ஜீன் மாதம்-30ம் தேதிக்குள் கீழ்காணும் ஆவணங்களை சமர்ப்பித்து ஒப்பந்ததாரர் பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம்.

1. ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் முந்தைய ஆண்டு ஒப்பந்ததாரர் புதுப்பித்தல் நகல்
2. செல்நிலை சான்றிதழ் (Solvency Certificate)
3. வில்லங்கச் சான்றிதழ் (EC)
4. சரக்கு மற்றும் சேவை வரி (GST) நிலுவையில்லா சான்றிதழ்
5. வருமானவரி சான்றிதழ்
6. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ள விவரம் அல்லது பணிகள் செய்த / செய்து கொண்டுள்ள பணிகளின் விவரங்கள்
7. வகுப்பு-1 முதல் வகுப்பு-5 வரை உள்ள ஒப்பந்ததாரர்களின் பதிவினை புதுப்பிக்கும் கட்டணமாக ரூ.5000/-ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
8. முதன்முறையாக (முதல் வருடம்) ஒப்பந்ததாரர் பதிவை புதுப்பிக்க தவறியவர்கள், ஒப்பந்ததாரர்கள் பட்டியிலிருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்படுவார்கள்.
9. இரண்டாம் முறை (இரண்டு வருடங்கள்) தொடர்ந்து ஒப்பந்ததாரர் பதிவை புதுப்பிக்க தவறியவர்கள், ஒப்பந்ததாரர்கள் பட்டியிலிருந்து நிரந்தரமாக நீக்கம் செய்யப்படுவார்கள்.

ஒம்/-விஜயகுமார்/06.03.2020
கண்காணிப்பு பொறியாளர்/பே.சா.து